முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1600

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**15.02.2024,** வியாழக்கிழமை

1. தவபலம் கொண்ட அரங்கனே
தர்ம சக்திமிகு தேசிகனே
அவதாரம் என் சூட்சுமமாக இருக்க
அகிலத்தை ஆளவந்த குருராஜனே ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் மாசி மாதம் 03 ம் நாள், 15.02.2024, வியாழக்கிழமை)
வரமாக உன்னுள் யானிருந்து
வையகத்தை ஆற்றல்பட ஞானலோகமாக்க வேண்டி
3. வேண்டியே அற்புதம் நடத்தி வருகின்றேன்
அன்னதனால் அரங்கனோடு
என் சக்தி பூரணமாய் இருக்க
அகிலத்தார் அதை உணர்ந்து வந்து
4. வரம் கேட்டு ஓங்காரக்குடில் தன்னில்
வாசம் செய்தால் போதும் அவர்கட்கெல்லாம்
வையகத்தில் ஆறுமுகன் என் அருள்பலத்தோடு
வருங்காலம் வரலாற்றை மாற்றுகின்ற மகா சக்தியாக
5. ஐயன் முருகன் என் அருள் அனுகூலத்தோடு
அனைவருமே ஆற்றல்மிக்க ஞானவான்களாக மாறி
மாறியே கலியினில் அற்புதத்தை
மாதவசி அரங்கன் வேண்டலாக
6. பேருலகமே ஞான லோகமாகும்படி
பிரமிக்க வைக்கும் ஞானத் தலைமையையும் ஞான ஆட்சியையும்
வருங்காலம் அரங்கன் ஆசியாக
வடிவேலன் என் துணையோடு அரங்கன் தொண்டர்கள் படைக்க நேரும்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—